


# பெரிய பெரிய பெரிய திமிங்கிலம்!

இது பழங்குடி மக்களின் பாடல்

சித்திரம் : நிதிஷா மஹாபாத்ரா

கதாவின் 300எம் திங்க்புக்



பெரிய, பெரிய திமிங்கலம்!

நீள நீள திமிங்கலம்!
குண்டு குண்டு திமிங்கலம்!





வாலை ஆட்டு திமிங்கலமே!



வாயிலிருக்கும் நீரை ஊற்று
திமிங்கலமே!

கடலின் அடியில் நீந்து திமிங்கலமே!





# வியப்பூட்டும் சாதுவான அரக்கர்கள்!


100 மனிதர்களைத் தன் வாய்க்குள் அடக்கும் படியான அளவு பிரம்மாண்டமானது எது தெரியுமா?

எதன் இருதயம் ஒரு கார் அளவு பெரியது தெரியுமா?

நீலத் திமிங்கிலம் மென்மையானது. மிக மிகப் பெரிய உருவம் கொண்டது. இன்னும் சரியாகச் சொல்வதென்றால், படு பிரம்மாண்டமானது! அதனுடைய நாக்கு மட்டும் ஒரு யானையின் எடையளவு இருக்கும்! ஆமாம், நீலத் திமிங்கலம் தான் உலகிலேயே மிகப் பெரிய உயிரினம்! இதுவரை உலகில் வாழ்ந்திருக்கக்கூடிய எல்லா உயிரினங்களிலும் நீலத் திமிங்கிலமே மிகவும் பெரியது! ஆனால், திமிங்கிலம் எதை உண்டு உயிர் வாழ்கிறது தெரியுமா? மிக மிகச் சிறிய உயிரியான ‘க்ரில்’ஐத்தான் அது உண்கிறது. ஆனால், தினமும் அதற்கு 3600 கிலோகிராம் ‘க்ரில்’ தேவைப்படுகிறது.

# நீலத் திமிங்கலம் தான் அது!

*Image Courtesy: Wikimedia Commons*



- ஒரு குட்டித் திமிங்கிலம் 25 அடி நீளம் இருக்கும்.
- ஒரு குட்டித் திமிங்கலம் மூன்று டன்கள் எடையும் சுமார் 25 அடி நீளமும் கொண்டதாக இருக்கும்.
- ஒரு குட்டித் திமிங்கிலம் ஒவ்வொரு நாளும் 100 கேலன்கள் (ஒரு கேலன் = 3.785 லிட்டர்கள்) பால் குடிக்கும். தினமும் 200 பவுண்டுகள் எடை கூடும் (அதாவது ஒரு மணி நேரத்தில் 9 பவுண்டுகள் எடை அதிகரிக்கும்!)
- ஒரு நீலத் திமிங்கிலத்தின் தமனிகள் வழியாக ஒரு மனிதனால் சுலபமாக நீந்திச்செல்ல முடியும்.
- நீலத் திமிங்கிலம் ஒரு முறை மூச்சுவிட்டால் அப்போது வெளியேறும் காற்றைக் கொண்டு 2000 பலூன்களை நிரப்பலாம்.
- நிலப்பகுதிகளிலும் கடல்பகுதிகளிலும் சேர்ந்து நீலத் திமிங்கிலமே மிகப் பெரிய விலங்கினம். ஆனாலும் மனிதர்களைக் கண்டால் அவற்றுக்கு மிகவும் பயம்! ஏனென்றால் மனிதர்கள் இந்த மென்மையான அரக்கர்களை மிக அதிக எண்ணிக்கையில் கொன்றழித்திருக்கிறார்கள்.
- ஆனால் நீங்கள் நினைத்தால் நீலத்திமிங்கிலத்திற்கு உதவ முடியும். ‘‘தயவுசெய்து நம் நீலத் திமிங்கிலங்களைக் காப்பாற்றுங்கள். சமுத்திரங்களின் சாதுவான அரக்கர்களைக் காப்பாற்றுங்கள்’’ என்று உலகத் தலைவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

**கீதா தர்மராஜன்:** குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவதை மிகவும் விரும்புபவர். TARGET (செயல் இலக்கு) என்ற குழந்தைகளுக்கான இதழின் ஆசிரியர்களில் ஒருவர். மேலும், பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தின் இதழான பென்சில்வேனிய கெஸட்டிலும் (The Pennsylvania Gazette) எழுதியவர் இலக்கியம் மற்றும் கல்விப் பணிகளில் குறிப்பிடத்தக்க சேவை செய்தமைக்காக இவருக்கு 2012 ஆம் ஆண்டு பெருமைமிகு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

**நிதிஷா மகாபாத்ரா** ஒரு ஓவியர், புகைப்படக் கலைஞர் மற்றும் graphic வடிவமைப்பாளர். பங்களூருவில் உள்ள Srishti Institute of Art, Design and Technologyயில் படித்துப் பட்டம் பெற்றவர், Bangalore, Visual Communication Designஐ சிறப்புப்பாடமாகப் பயின்றவர்.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தது: லதா ராமக்கிருஷ்ணன்

KATHA

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவிலிருந்து இலக்கியத்திற்குத் தொடரும் இயக்கத்தை சாத்தியமாக்குவதே எங்கள் நோக்கம்.

“இந்திய மணிமகுடத்திலிருக்கும் அருங்கல்வி முத்து கதா”

— Naoyuki Shinohara, Deputy Managing Director, IMF

நகரங்களில் நிலவும் சாதாரண, அசாதாரண துயரங்களைக் கையாளவும் சமாளிக்கவும் மேற்கொள்ளப்படும் படைப்பூக்க முன்முயற்சிகள் எல்லாவற்றுக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது கதா.

— Charles Landry, *The Art of City Making*

கதாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அந்த அன்பும் அக்கறையுமே இத்தனை அற்புதச் சித்திரக்கதை நூல்களை கதா உருவாக்கக் காரணம்.

— Time Out

கதா நூல்களில் வரும் குழந்தைகள் செய்வதைப்போல் குழந்தைகளால் தங்கள் சமூகங்களில் நிலையான நிஜமான மாற்றத்தை செய்ய முடியும் என்ற சிந்தனையே கதாவினுடைய பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

— Papertigers

இந்த நூலின் முதல் பதிப்பு 2021இல் வெளியாகியது.
காப்புரிமை © கதா, 2017, 2021
பிரதியின் காப்புரிமை © மணீஷ் லக்கானி
சித்திரங்களுக்கான காப்புரிமை © மணீஷ் லக்கானி
விலாசம்: A3, சர்வோதயா என்க்ளேவ்,
ஸ்ரீ அரபிந்தோ மார்க்
புது தில்லி - 110 017.
தொலைபேசி : 91-11 4141 6600 . 4141 6610
மின்னஞ்சல்: editors@katha.org,
இணையதளம்: www.katha.org

**எங்கள் குறிக்கோள்:** ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சிக்கும், அர்த்தத்திற்கும் நன்றாக படிக்க வேண்டும்.

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவு முதல் இலக்கியம் வரையிலான திட்டங்களை செயல்படுத்துகிறோம். வாசிப்பினால் கிடைக்கும் ஆனந்தத்தை குழந்தைகளும் பெரியவர்களும் உணரச்செய்வதே எங்கள் நோக்கம். நாங்கள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகளுடன் பணியாற்றி அவர்களை தர நிலை வாசிப்புக்கு கொண்டு வந்துள்ளோம்.

இந்த நூலின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பாளரின் எழுத்துபூர்வ முன் அனுமதி இன்றி இந்த நூலின் எந்தவொரு பகுதியும் எந்த வடிவத்திலும் மீள்பிரசுரம் செய்யப்படலாகாது; பயன்படுத்தப்படலாகாது.

எங்கள் நூல்களின் விற்பனை மூலம் கிடைக்கும் நிகர லாபத்தில் 10% சமூகத்தின் அடித்தட்டிலுள்ள குழந்தைகளின் வாசிப்புக்கும், அவர்களுக்கான வாழ்நாள் முழுவதுமான கற்றல்சார் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.



## இண்டிகோ தொடரில் இடம்பெறும் மற்ற ஐ எல் ஆர் புத்தகங்கள்








































FOR OUR BOOKS

www.books.katha.org

கதைகளின் வழியே
இந்தியாவின்
பல்கலாச்சார
அடையாளம்

— The Pioneer

for children
a katha book
ISBN 978-93-88284-81-3
9 789388 284813
www.katha.org
₹ xxx

மகிழ்ச்சிக்கும் அர்த்தத்திற்கும் படியுங்கள்